©
தமிழ்நாடு அரசு
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 6] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 10, 2016
தை 27, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு–2047

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை நிலை எண் 131, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, நாள் 27, அக்டோபர் 2015.]*

நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகம்) ஆணை புது தில்லி, 28 செப்டம்பர் 2015.

எஸ்.ஓ. 2642 (E).— 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு 2002ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில உணவுப் பொருட்கள் (உரிமம் பெறும் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள்) நீக்கல் ஆணைக்கு மேற்கொண்டும் திருத்தம் வழங்கி பின்வரும் ஆணையை மத்திய அரசு இதனால் பிறப்பிக்கிறது. அதாவது:–

1. (1) இந்த ஆணை 2015ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில உணவுப் பொருட்கள் குறித்த (உரிமம் பெறும் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள்) நீக்கல் ஆணை (இரண்டாவது திருத்தம்) என்று அழைக்கப்படும்.

   (2) இந்த ஆணை 01–10–2015ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. 2002 ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில உணவுப் பொருட்கள் (உரிமம் பெறும் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள்) நீக்கல் ஆணையின் 7 ஆம் பகுதியைச் சேர்ந்த உட்பகுதி (i)இல் இனம் (1)–க்குப் பதிலாகப் பின்வரும் இனம் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும். அவையாவன:–

   "(i) 2016ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாள் வரையிலான கால அளவிற்கு பயறு வகைகள், சமையல் எண்ணெய்கள் மற்றும் சமையல் எண்ணெய் வித்துக்கள்:

ஆனால், இந்த இனத்தில் கண்டுள்ளவை எவையும் பின்வருவனவற்றுக்குப் பொருந்தாது.

(a) ஏற்றுமதிக்காக இருப்பு வைக்கப்பட்டுள்ள பயறு வகைகள், சமையல் எண்ணெய் வித்துக்கள், சமையல் எண்ணெய் வகைகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ், சரக்கு இருப்பு வைப்பதற்கான வரையறையின் கருத்தெல்லையிலிருந்து அந்நிய வர்த்தகத் தலைமை இயக்ககத்தால் வழங்கப்பட்ட ஏற்றுமதி, இறக்குமதி குறியீடு வைத்துள்ள ஏற்றுமதியாளர்கள்.

(b) 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் சரக்கு இருப்பு வைப்பதற்கான வரையறைகளின் கருத்தெல்லையிலிருந்து உணவு பொருட்களைத் தயாரிப்பதற்காக உரிமம் பெற்ற உணவு பதப்படுத்துவோரால் உணவு பதப்படுத்துவதற்கான மூலப்பொருட்களாகப் பயன்படுத்துவதற்குக் கருதப்பட்ட இருப்பிலுள்ள இன்றியமையாப் பொருட்கள்.

(c) 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் சரக்கு இருப்பு வைப்பதற்கான வரையறைகளிலிருந்து சில்லறை வியாபாரிகள் (பல்வேறு கடைகள்) மற்றும் பெரிய அளவிலான பல்பொருள் அங்காடி விற்பனையாளர்கள்".

[கோப்பு எண்: 10/03/2015-ECR&E.]

**ஜி. குருசரண்,**
*தனிச் செயலர்.*

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**சிவதாஸ் மீனா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.